# கல்வெட்டுகளில் நாடக, இசைக் குறிப்புகள்

**முனைவர் சு. பேச்சியம்மாள்**
**தமிழியல் துறை, உதவிப் பேராசிரியர்**
**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

10

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் நாடகக்கலை வடிவத்தின் வரலாறு, அம்மொழி மக்களின் நாட்டின் வரலாற்று இயங்கியல் பின்புலத்தில் வைத்து நோக்கப்படும் பொழுதே அதன் இயல்புகளும் அந்த இயல்புகளுக்கான காரணங்களும் தெளிவுறுத்தப்படும். நாடகத்தை இலக்கிய உருவாக்கத்துடன் தொடர்புபடுத்தி நோக்கப்பட்ட தமிழ் நாட்டின் சமூக பொருளாதார உருவாக்கம் பற்றிய சரியான ஆய்வு ஒன்ற இதுவரை செய்யப்படவில்லை. தமிழ் நாடகம் பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் நாடக நிலை நின்று ஆய்வு செய்வனவாக உள்ளதேயன்றி நாடகத்தை சமூக நிறுவனமாகப் பார்க்கும்கண்ணோட்டத்தில் அத்தகைய, கூறாமல் விட்டுவிட முடியாதளவுக்கு முக்கியமான ஆய்வுகள் எதுவும் வரவில்லை என்பதை கருத்தில் கொண்டு கல்வெட்டுகளில் நாடக, இசைக் குறிப்புகள் என்ற தலைப்பு தேர்வுசெய்யப்படுகிறது.

**திறவுச் சொற்கள்**

சாந்திக் கூத்து, சக்கை கூத்து, அறச்சலூர் இசைக்கல்வெட்டு, குடுமியான் மலைக் கல்வெட்டு.

**முன்னுரை**

தமிழரின் மரபு ரீதியான வகைப்பாடாக உள்ள முத்தமிழ், இயல், இசை நாடகம் என்ற மொழியின் மூன்று வடிவங்களைக் குறிக்கின்றது. சமஸ்கிருத சொல்லான நாடகம் என்பது நடனத்தையும் நாடகத்தையும் குறித்தது. எனவே மரபு ரீதியான கண்ணோட்டத்தில் நடனமும் நாடகமும் தமிழ் பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன என்பதை இலக்கியங்கள் உணர்த்தினாலும் நாடக வடிவங்கள் இனங்காணப்பட்டு பரிணாமம் வளர்ச்சி அடைந்ததை கண்டறிவது அவசியம் என்பதால் கல்வெட்டுகளில் நாடகம் குறித்தக் குறிப்புகளை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**நாடகத்தின் தோற்றம்**

. தொல்காப்பியம், நாடக வழக்கம் உலகியல் வழக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு கலித்தொகை, பரிப்பாடல் ஆகியவை யாப்புகளில் வரும் என்றும் அவை புலநெறி வழக்கிலிருந்து வேறுபட்டவை என்று காட்டுகிறார். தொல்காப்பியர். இலக்கியத்தில் நாடகங்கள் பற்றியோ நாடகக்காரர் பற்றியோ நம்மிடம் மிகக் குறைந்த தகவல்களே கிடைக்கின்றன. நடனம், நாடக மரபுகள் பற்றி கூறும் முதலாவது இலக்கியச் சான்று சிலப்பதிகாரம். பல்லவர் காலத்தில் ஆடல் மகளிரைக் கோயிலில் வைத்துப் பேணும் பண்பு தொடங்கியது. சிலப்பதிகாரத்தில் மாதவி இந்திரவிழாவில் ஆடுகிறாள். ஆனால் அவள் எந்த கோயிலுக்கும் உரியவளாகச் சுட்டப்படவில்லை. வேட்டுவவரி ஆயரினத்தவரின் சடங்கு, ஆடல்களை விரிவாக பேசுகிறது. அதே போல் பல்லவர் காலத்தில் மகேந்திரவர்ம பல்லவன் இயற்றிய மத்த விலாச பிரகடனம் என்ற சமஸ்கிருத நாடகம் கிடைத்திருப்பது போல் தமிழில் கிடைக்க வில்லை.,இதற்கு முந்தைய நூலான பெருங்கதையில் உதயணனின் வீரத்தை

பற்றி சிறப்பிக்கும் பொழுது உஞ்சைக் காண்டத்தில் நாடகச் செயற்பாடுகள் பற்றி அறியமுடிகிறது

ஆரம்ப நாட்களில், நாடகம் ஒரு சிறப்பான இலக்கிய வடிவமாக வளரவில்லை நாடகத்தில் பாத்திரங்களின் கூத்துகள் கதைப்படல்களிலிருந்தோ, காப்பியங்களிலிருந்தோ எடுக்கப்பட்டு பாத்திரங்களுக்கேற்ப உடை அணிந்த நடிகர்களால் இசைக்கும் நடனத்துக்கேற்பப் பாடப்பட்டன என்றும், அவ்வாறான நாடக அளிக்கைக்குரிய சொல்லாடலாக அமைய வேண்டும் என்று நோக்குடன் இந்தக் கதைப்பாடல்களைப் புலவர்கள் எழுதினர் என்றும் நாராயணன் கூறுகிறார். நவ வீரயுகப் பாடல்கள் கதைப் பாடகர்கள் பலர் பற்றிய தகவலை வெளிக்கொணர்ந்துள்ளனர். ”பாடுநர் ஒருவர் ஒரு காப்பியக் கதையை எடுத்துரைப்பது தனிக்கலையாகும். ஆகவே அதனை நாடகமாக எண்ணி மயங்கக்கூடாது” என்கிறார் சிவதம்பி ( பக்.115).

**கல்வெட்டுகளில் இசை, நாடகக் குறிப்புகள்**

திருவாரூர் மாவட்டம் நீடா மங்கலம் வட்டத்தில் உள்ள திருவீரா மீசுவரம் என்ற ஊரில் உள்ள ஸ்ரீ ராமனாதசாமி கோயில் முன் மண்டப கிழக்குச் சுவரில் கி.பி., 10, 11 ம் ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டில் இவ்வூரைச் சேர்ந்த வெள்ளாளன் கடம்பனூர்க் கிழவனான கண்டன் அக்காரி என்பவன் இக்கோயிலிலுள்ள கங்காள தேவர்கு மூன்று சந்தியும் வாத்திய கருவி இசைப்பதற்கு பொன் கொடையளித்த செய்தியும் அதனைப் பெற்றுக் கொண்ட இவ்வூரைச் சேர்ந்த உவச்சர்கள் வாத்தியம் இசைப்பதாக உறுதியளித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. (கல்வெட்டு எண்: 16 பக்-113 தொல்லியல்துறை)

கி.பி.1019 இராசேந்திர சோழன் காலத்தில் மதனமஞ்சரிச் சதுர்வேதி மங்களத்திலுள்ள திருவிரா மீசுரமுடையார் கோயிலில் சிவயோகிகள் எட்டுபேருக்கு உணவளிப்பதற்கும், இக்கோயிலில் ஆடுபவனுக்கு ஊதியம் தருவதற்கும், சந்திவிளக்கு எரிப்பதற்கும் நிலம் தானமாக அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது( பக்.113).கோயிலில் ஆண்கள் ஆடியதற்கான பதிவுகள் வருகிறது. எதற்காக ஆடினான் என்பதை அறியமுடியவில்லை.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி வட்டத்தில் திருமக்கோட்டை என்ற ஊரில் கி.பி. 16 -ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு திருமெய்ஞானபுரிஸ்வரர் கோயில், அர்த்த மண்டப வடபுற ஜகதியில் ”மல்லு இராவுத்தர் குமாரர் திம்மப்பர் என்பவர் மெய்க்கு நாயனார் கோயில் நாச்சியாராகிய பெரிய நாச்சியார்க்கு புதிதாத கோயில் கட்டுவித்து திருப்பணி செய்ய நிமந்தக்காறரையும் கல்தச்சனையும் பதிவு (நியமனம்) செய்தார். அக்கோயிலில் அடைப்புப் பணிகள் செய்வதற்கு தேவரடியார் பெண்களையும் பதிவு செய்து இவர்கள் ஒவ்வொருவருக்கும் கால் (வேலி) நிலமாக நாலு பேருக்கு ஒரு (வேலி) நிலமும் கொடுக்கப்பட்டது. அத்துடன் ஒருவர்க்கு ஒரு கோடி (ஓரணை) வீதம் நாலு பேருக்கும். .4 ஜோடி மாடுகளும் நாலு பேருக்கும் நாலணை ஏர்களும் கொடுக்கப்பட்டன. தேவரடியார் பெண்கள் மூன்று அடைப்புக்கு பதிவு செய்யப்பட்டிருந்தனர். அடைவு என்ற நாட்டியம் தொடர்பான செல்லே இங்கு அடைப்பு என்று கூறப்பட்டுள்ளது ( கல்வெட்டு எண். 2. பக்.3).

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டத்தில் உள்ள மணப்படை பகுதியை ஆண்ட திரு விதாங்கூர் பூதலவீர ராமவன்மர் அரசரின் வரலாற்று கண்டுகொல்லம் 713, கி.பி.1538 ஆண்டு தமிழ் . கல்வெட்டு முன்றீஸ்வர முடையார் கோயில் மஹா மண்டபம் தென்புறச் சுவரில் ”திருவிதாங்கூர் இராமவர்மன் கோயில் பாடகனுக்கு காணியாட்சையாக நெல் தானம் வழங்கிய

செய்தியைத் தெரிவிக்கிறது.

திருநெல்வேலியில் கி.பி. 1230 ஆண்டு பாண்டியர் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு நெல்லையப்பர் கோயில் உள்ள திருச்சுற்று வெளிப் புறச்சுவரின் கிழக்கில் தாரை ஊதிகள் சின்ன மூதிகள் ஆகிய கோயில் இசைப் பணியாளர்களுக்கு வழங்கிய ஊதியம் பற்றி குறிப்பிடப்படுகிறது (பக்.122).

அடுத்ததாக மணிமாண்ப வாயிலுக்கு வடக்கு முதல் திருச்சுற்று வெறிப்புறச் சுவரில் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது. மதுரை திருவாலா வாயுடையார் கோயில் (மீனாட்சி கோயில்) தேவரடியான் நக்கன் ராஜேஸ்வர புஜங்கத் தலைக்கோலி என்பவள் விற்றுக் கொடுத்த நிலம் எல்லைகளும் கூறப்படுகிறது. (பக்.134). திருநெல்வேலியில் நெல்லையப்பர் காந்தியம்மான் வடக்க வாசல் தரைப் பகுதியில் மத்தளம் வாசிக்கும் நாலங்கராயன் என்பவன் வழங்கிய தானம் " குறிப்பிடப்பட்டுள்ளது (217).

நெல்லையப்பர் கோயில் மூன்றாம் திருச்சுற்று மேற்குப் பிரகாரம் கிழக்குச் சுவரில் ஷர்வலோக சக்ரவர்த்தி ஷரிஸ சேர காணாம் ஸாஸ் வதம் சிலாசாஸனம் ஆதி சண்டேஸ்வர் தேய நாமபத்தின்மை இவ்வூர் ஆழ்வான் வீரபாண்டிய தேவற்கு முன்பு தான நமக்குத் தட்டன் அனந்தலில் பாவாடைக்கு செங்கழுநீர் பூவுக்கும் பாடுவர்க்கும் இட்ட நீ மந்தல்களுக்கு முள்ளி நாட்டுப் பிலா விளைக்கு காடு வெட்டியில் நிலத்திக்கும் நத்தத்தக்கும் கடமையான நெல்லும் பணமும் கல வீரபாண்டிய தேவற்கு உயங ஆவது கார்கு புறம்பாக வந்த நிமந்தங்கள்" (பக் 211) செங்கழுநீர்ப்பூ கொணர்வார்க்கும் பாடுவார்க்கும் கொடுக்கப்பட்ட கொடை பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது.

`கூத்தக்காணி என்ற சொல் கோவில் திருவிழா நாளில் கூத்தாடும் குழுவினர்க்கு அளிக்கப்பெறும் இறையிலி நிலம், திருநாளுக்குக் கூத்தாடுகைக்குக் காணியாக- நிலம் (புதுக் கல்-139.) தெ.கல்.தொ. 2:2, கல். 51) .**சன்னவடம் என்ற சொல்** மெல்லிய சாடுகளால் திரிக்கப்பட்ட நீண்ட பொன் மாலை. சன்னம் பொற்கொல்லரின் தொழில் வழிர் குறிக்கும் சொல். மெல்லிய என்றும், பொடி என்றும் கூறுவர். "சன்னம் வைத்து ஊதினான்"- வழக்கு.**சாக்கை என்பது** சாக்கையென்னும் கூத்தினை ஆடுபவன். தஞ்சைப் பெரியகோயிலில், முதல் இராசராசன் ஆட்சியில் இக்கூத்து நிகழ்ந்துள்ளது. சாக்கையன் ஆரியம், தமிழ் என்ற இருவகைக் கூத்தும் ஆடும் திறன் பெற்றவனாவன். "மறைக்காட்டுக் கணவதியான திருவெள்ளறைச் சாக்கைக்கும் பங்கு ஒன்றரையும்" (தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு) (தெ.கல்.தொ. 2. கல். 66) சாக்கைகூத்து என்பது தமிழகத்தில் நிலவிய கூத்து வகையில் ஆடவரால் ஆடப்பெறுவது. இக்கூத்தாடுபவர் சாக்கையர் என்று பெயர் பெறுவர். சாக்கைக் கூத்தர் ஆரியக் கூத்தும் ஆடும் திறமை பெற்றிருந்தனர். தமிழகத்துச் சிவன் கோயில்களில் இக்கூத்து ஆடப்பெறுதல் வழக்கு. இக்கூத்து, மூன்று பகுதியால் ஏழு அங்கமுடையதாக ஆடப்பெறும். திருவிடை மருதூர்க் கல்வெட்டு இக்கருத்தினைப் புலப்படுத்துகின்றது.

``"சிறுபழுவூர் திருவாலந்துறைத் தேவதான நிலம் திருவாலந்துறை நல்லூரிலே அப்பிகை அஸ்வதி திருளிழாளிற்கு வந்து சாக்கைக் கூத்து ஆடக்கடவ அடலையூர் சாக்கு மூறைங்கம் ஆட நிவந்தம்" (தெ.கல்.தொ. 19. கல். 171)

"ஆரியக் கூத்தாட - திருவெள்ளறைச் சாக்கைக்கு இந்தக் கூத்து துடங்க மூன்று கூத்தாடுவதாகவும் ஆக இந்தக் கூத்து ஏழு அங்கமும் ஆடுவதாகவும்" (கல்வெட்டுத் துறை அறிக்கை

எண்- 154/1895. தமிழ் நாடக வரலாற்றில் சாக்கையர் முக்கிய இடம்பெறும், சாக்கையரின் கூடியாட்டம்" என்ற சமஸ்கிருதம் சாராத வடிவம், சமஸ்கிருத நாடகத்துடன் பிரிக்க முடியாத தொடர்பு கொண்டுள்ளது.

வையாபுரிப்பிள்ளை, கூத்தச் சாக்கையர், தலைக்கோல் என்பன பற்றிய குறிப்புகள், சங்ககாலத்துக் கூத்தர், விறலியரது எளிமையான நடனத்தைவிடக் காலத்தாற் பிந்திய தன்மையை வெளிக்காட்டுகிறது' என்பர். ஏனென்றால் இந்தச் சொற்கள் சாசனங்களில் 10 ஆம் நூற்றாண்டளவிலேயே காணப்படுகின்றன. ஆனால், இவை அக்கால முடிவிலேயே தோன்றின என்பதை ஏற்க முடியாது. ஏனெனில், சிலப்பதிகாரச் சாக்கையர் கூத்தும், சாசனங்களிற் கூறப்பட்ட சாக்கையர்கூத்தும் ஒன்றா என்பது தெரியாது. சிலப்பதிகாரத்தில் சாக்கையர்கூத்து அரசியற் பொழுதுபோக்காக இருந்ததைக் காட்டும். ஆனால், சாசனங்களில் கோயிலில் நடைபெற்ற சடங்கு நிகழ்ச்சியாகக் குறிப்பிடப்படுகிறது."ஆனால் சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என வையாபுரிப்பிள்ளை கூறுகிறார்.

**சாந்திக்கூத்து**

தமிழகத்தில் வழக்கிலிருந்த கூத்து வகையுள் ஒன்று. உலக மக்களின் அமைதி வேண்டி யாடப்படுங்கூத்து. இக்கூத்து ஒன்பது வகையுடையது என்பதும், திருக்கோயில்களில் நிகழும் திருவிழாக் காலங்களில் ஆடவல்ல மகளிர் ஆடிவந்தன ரென்பதும் கல்வெட்டுக்களால் அறியப்பெறுகின்றது. "சித்திரைத் திருநாளுக்குக் கூத்தாடுகைக்கு சாந்திக் கூத்தாடுகிற ஏழுநாட்டு நங்கைக்கு கூத்தாடுகைக்கு விட்ட நிலம் — இந்நிலம் கொண்டு இத்திருநாளுக்கு ஆடக்கடவ கூத்து ஒன்பது ஆடுவாளாகவும்". (விக்கிரமசோழன், கி.பி. 1134, புதுக்.கல். 128)

"சாந்திக் கூத்தே தலைவனின்பம் ஏந்தி நின்றாடிய வீரிருநடமவை, சொக்கம் மெய்யே யவிநய நாடகம் என்றிப் பாற்படுஉ மென் மனார் புலவர்"

சிலம்பு அரங்கேற்றுக்காதை - வரி 12க்கு உரை விளக்கம். ஆடவரும் இக்கூத்தினை ஆடியுள்ளன ரென்பதனை, 'சாந்திக் கூத்தன அரயன் ஒன்றாயிரம்" என்னும் கல்வெட்டுப் பகுதி உணர்த்துகின்றது. (புதுக் கல்.275)

**அறச்சலூர் இசைக்கல்வெட்டு**

அறச்சலூர் இசைக்கல்வெட்டு தமிழகத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் தனியிடம் பெறும் ஒன்று. கி.மு. 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இந்தக் கல்வெட்டு, இசைத்தாள வரிசையைப் பற்றி கூறும் முதல் கல்வெட்டு ஆவணமாகத் திகழ்கின்றது. இக்கல்வெட்டின் எழுத்துக்கள் பண்டைய தமிழ் எழுத்தான தமிழி எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளது. அறச்சலூர் என்னும் ஊர் ஈரோடு-காங்கேயம் சாலையில் அமைந்திருக்கும் ஒரு சிற்றூர் சாலையில் வலது புரத்தில் உள்ள மலைப்பகுதியில் கருவேல மரங்கள் நிறைந்த ஒரு காட்டுப் பகுதி முழுவதும் பாறைகள் நிறைந்திருக்கின்றன. பாறைகளுக்கு இடையே உள்ள குகைப்பகுதிகளில் கி.மு. 2-ம் நூற்றாண்டில் சமண முனிவர்கள் தங்கியிருந்ததற்கான சிதைந்த நிலையிலான கற்படுக்கைகளையும் குகைப்பகுதிக்கு முன்னே உள்ள பாறையில் காண முடிகின்றது.

இந்த பாறைப்பகுதியின் மேல் அமைந்திருக்கும் குகைப்பகுதியில் தான் பண்டைய தமிழி

(பிராமி) கல்வெட்டுக்கள் அமைந்திருக்கின்றன. ஈரோடு கல்வெட்டுத்துறை அறிஞர் எஸ்.ராசு அவர்களால் 1960 இந்தக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கல்வெட்டு அமைந்திருக்கும் குகைப்பாறையில் இசைக்கல்வெட்டு. ஐந்தெழுத்துக்கள் இடமிருந்து வலமாகவும் ஐந்தெழுத்துக்கள் மேலிருந்து கீழாகவும் என்ற வகையில் இந்தக் கல்வெட்டுக்கள் அமைந்திருக்கின்றன. கல்வெட்டு ஆய்வாளர் திரு.துறை சுந்தரம் இந்த வாசிப்பை கீழ்க்காணும் வகையில் குறிப்பிடுகின்றார்.

**த தை தா தை த**
**தை தா தே தா தை**
**தா தே தை தே தா**
**தை தா தே தா தை**
**த தை தா தை த**

இந்த இசைக்கல்வெட்டுக்கு அருகில் மேலும் இரண்டு வரிகளிலான தமிழி கல்வெட்டு ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது. இதனை வாசித்தளித்த ஐராவதம் மகாதேவன் அவர்கள் இதன் வடிவத்தை

**"எழுதும் புணருத்தான் மசிய்**
**வண்ண்கன் தேவன் ஙாத்தன்"**

எனக் குறிப்பிடுகின்றார்.

இசை நடனம் பற்றிய குறிப்புக்களைக் கொண்ட காலத்தால் முந்தியது திருவாதவூர் (2) கல்வெட்டு,

**"உபசன் பர்அசு**
**உறை கொட்டுபிதோன்" (ப.329)**

இக்கல்வெட்டுகளில் உபசன் என்பதை மகாதேவன் உபாத்தியாயன் என்று கொள்கிறார். "'உறை கொட்டுபிதோன்" என்பது உறைவிடத்தை வெட்டிக் கொடுத்தவன் என்பதாகும். "பர்அசு" என்பது ஒருவரின் பெயராகக் கொள்ளப்பட வேண்டுமா என்று தெரியவில்லை. பரசுதல் என்பது தெய்வங்களை விளித்துப் போற்றிப் பாடுதல் என்பதாகும். பரவு எனும் வினையடியின் இன்னொரு வடிவம் என்கிறார் சிவத்தம்பி. நச்சினார்க்கினியர் உரையில் கூத்தரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, கூத்தரை பாரசவர் என்று குறிப்பிடுவார். இதற்கு ஒரு வடமொழி மூலத்தை கொள்ளும் மரபே பெரும்பாலும் இருந்து வந்துள்ளது. பிராமண ஆணுக்கும். சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்தவர்களையே இவ்வாறு குறிப்பிடுவது வழக்கம்".

ஐராவதம் மகாதேவன் தரும் விளக்கத்தால் (பக். 553, 554) சங்கப் பாடல்களினூடே நாம் இதுவரை விரித்து நோக்காத ஒரு மரபும் இருந்தது தெரியவருகின்றது. பர்அசு என்பது பரவு என்பதோடு தொடர்புடையது என்று மகாதேவன் கூறுகிறார். "பரவுதல்" என்பது துதித்துப் பாடுதல் என்பதாகும். அதற்கான குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உண்டு (பாட்டும் தொகையும்). பர்அசு என்பது பரவுதலின் பேச்சு வடிவமாக இருந்திருக்கலாம்.

சங்க இலக்கியத்தில் பரிபாடலைத் தவிர, துதிநிலையில் வரும் பாடல்களில், தனிப்பாடல்கள் இல்லை. ஆனால், அத்தகைய ஒரு பாடல் முறை இருந்ததென்பது "வெறியாட்டு"ப் பற்றிய குறிப்புகளால் தெரிய வருகிறது. இங்கு சமண மதநிலைப் பாடலே குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மகாதேவன் பரவ எனும் சொல், நடனத்தோடும் தொடர்புடையது என்பதை நன்கு காட்டுகிறார். பரசவர் என்பதே பின்னர் சமஸ்கிருத மயப்பட்ட ஒரு விளக்கத்தைப் பெற்றிருக்கலாம் எனக்

கூறுகின்றார். மகாதேவன் முக்கிய மாகக் கொள்வது இந்தப் பர்அசு. பரவு மரபு உவச்சரோடு சேர்த்துப் பேசப்படுவதாகும்.

இந்தக் கல்வெட்டைப் பொறுத்தவரை உபச்சன், உவச்சன் என்பது உபாத்யாய என்பதன் பாகதவழிப்பேறு என்று கூறிவிட்டு, தொடர்ந்து (ப. 553) உவச்சன் என்ற சொல்லையெடுத்து, அது எவ்வாறு கோயிலில் மேளம் வாசிப்போரைக் குறித்து நின்றது என்பதை பிற்காலக் கல்வெட்டுக்களை ஆகாரமாகக் கொண்டு கூறுகிறார். சமணநிலையில் உவச்சன், உபாத்தியா யனைக் குறிக்க பின்னர் வைதிக நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இதிலுள்ள மிகச் சுவாரசியமான விடயம் என்னவெனில், கம்பரை உவச்சர் குலத்தினராகக்கொள்ளும் மரபு இருந்தமையாகும்.

உவச்சன் எனும் சொற்பிதிர் வழி விவாதம் ஒரு புறமிருக்க நமக்கு முக்கியமானது பரசுதல் என்பது சமணச் சூழலிலும் மதநிலைத் துதிப்பாடலைக் குறித்தது என்பதாகும் . இது சமண பௌத்த மதநிலை வழியாக தமிழ் மத, இலக்கிய மரபு கனினூடே வந்து சேருவதாகும். இந்தக் கல்வெட்டு கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்குரியது என்பது முக்கிய வொரு தரவாகும்.

பிரவும் உவச்சன் பற்றிய குறிப்பு கி. மு. 2ஆம் நூற்றாண்டுக் கல் வெட்டில் வருகின்றனவெனிற் கி. பி. 4ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில், தமிழ்நாட்டு இசை நடன, ஆற்றுகை பற்றிய வரலாற்றில் இதுவரை நமக்குக் கிடைக்காத ஒரு பெரும் பொக்கிஷம் கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்கான அரச் சலூரைச் சார்ந்த மூன்று கல்வெட்டுக்களில் கிடைத்துள்ளது. இம் மூன்றும் ஓரிடத்திலேயே மேல் கீழாக வெட்டப்பட்டுள்ளன. முதலாவதாக உள்ள மேற்புறக் கல்வெட்டில்,

**"எழுத்தும் புணருத்தான் மலைய்**
**வண்ணக்கன் தேவன் சாத்தன்"**

எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் கருத்து, மலைய் வண்ணக்கனாகிய தேவன் சாத்தன், கீழ்வரும் (தாளச்) சொற்கட்டுகளுக்குரிய எழுத்துக்களைச் சேர்த்தான் என்பதாகும். இங்கு எழுத்து என்பது, சங்க இலக்கியத்தில் இச்சொல்லிற்கான சித்திரம் என்ற பொதுக் கருத்து அல்லாது எழுத்தொலியையே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அதாவது, "த தை தா தை த" எனவரும் லயத்திற்கான எழுத்துக்களுள்ள சொற்களை இந்த சொற்கட்டுடன் சேர்த்தான் - புணருத்தான், என்றே கொள்ள வேண்டும். இந்த புணர்த்த என்ற சொற் பயன்பாடு சங்க இலக்கியத்தல் வருகின்றது. கி.பி. 4 -ம் நூற்றாண்டு கல்வெட்டில் நடனம், இசை ஆகியவை சாஸ்திரீய நிலைப்பட்டனவாகிவிட்டன என்பது தெரிகிறது என்கிறார் சிவத்தம்பி.

தொல்காப்பியத்தில் வரும் பண்ணை என்பது பெண்களுடன் இன்ப வேடிக்கைகளில் ஈடுபடும் இடமாகவே பேசப்படுகிறது. பண்ணை எனும் சொல்லே இசையுடன் இயைந்ததாக இருந்திருத்தல் வேண்டும் என்று சிவதம்பி குறிப்பிடுகிறார்.

அத்தகைய ஓரிடத்தில் விதிமுறையான ஆடல் வாய்பாடுகள் இருந்திருக்கலாம். இக்கல்வெட்டு எத்தகைய பின்புலத்தில் இந்தப் பதிவுகளைச் செய்த தென்பது புரியவில்லை. எவ்வாறாயினும் இது ஓர் ஆடற் களத்தோடு அல்லது ஆடற் கற்பித்தலோடு தொடர்புற்ற ஓர் இடமாகவே இருந்திருத்தல் வேண்டும். ஆகவே கி. பி. 4ஆம் நூற்றாண்டளவில் நடனம் (ஆடல்) சாஸ்திரிய விதிமுறைக்கு உட்டபட்டதாகிவிட்டது எனக் கருதலாம். இதில் மேலுமொரு முக்கிய விடயம் என்னவெனில், இச்சொற்கட்டு, இன்று வரை கூத்து மரபிலும், பரத நாட்டிய மரபிலும் பேணப்பட்டு

வருகின்றமையாகும். பரதத்தில் இவை அடவுச் சொற்களென்றும், கூத்தில் தாளக்கட்டு என்றும் கூறப்படுகிறது.

பிற்காலத்தில் கி.பி. 1710 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு நாட்டார் வரலாற்றைக் கொண்ட நாடகக் குழுவைப் பற்றி கூறுகிறது. இது மதுரை மாவட்டத்தில் உள்ள வளையங்குளம் கிராமத்தில் வரலாற்றுப் பேராசிரியர் தலைமையிலான மாணவர் குழுவால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வலையங்குளம் கிராம திருவிழாவில் நிகழ்த்தப்படும் நாடகங்களுக்கு பிரபலமானது. வலையங்குளம் கிராம திருவிழாவின் போது நிகழ்த்தப்படும் நாடகங்களுக்கு பிரபலமானது. ஒரு காலத்தில், கிராமத்தில் மாலை நேரங்களில் 98 நாட்கள் நாடகங்கள் நடத்தப்பட்டதாக சொல்லப்படுகிறது.

**குடுமியான் மலைக் கல்வெட்டு**

இக்கல்வெட்டு - காந்தாரம், கைசிக மத்திமம், பஞ்சமம், சாதாரிகம் முதலிய பண்களைக் குறிப்பிட்டுள்ளது. மற்றும் எப்படிப் பாடவேண்டும் என்பதும் அதில் உள்ளது.

எழுத்துக்களாய் இல்லாமல், இசைக்குரிய குறிகள் இட்டிருப்பது சிறப்புக்குரியதாகும்.

மகேந்திரவர்மன், 'சங்கீர்ண ஜாதி' எனும் பட்டத்தைப் பெற்றிருந்தான். இதனால், சங்கீர்ண ஜாதித் தாள வகையினை அறிந்திருந்தான். அவன் இசைக் கலையில் வல்லவன் என்றும் கருதப் பெறுகிறது. கல்வெட்டில்,

**கற்கப் பெறுவன கானஞ் சொல்லிய**

**புகிற்பருக்கும் திமி முக்கதா திரு**
**மத்திக்கும் உரித்து**

என்று இருக்கிறது.

"இசைப் பயிற்சிக்காகக் கற்கப் பெறுவன கானஞ் சொல்லிய ஆசிரியர்க்கும், திமி என்ற இரண்டு மாத்திரை கொண்ட தாள எடுப்பில், முக்கால் கால அளவில் தோன்றும் தா, திரு என்ற சந்த வேறுபாடுகளைக் கொள்ளும் மத்திம கிராமத்திற்கும் இப்புதிய முறை உரியது" என்று திருவாளர் ப.தண்டபாணி அவர்கள் கருதுகின்றார்.

கல்வெட்டின் வேறொரு பகுதியில்,

**குணசேன பிரமாணம் செய்த**

**வித்தியா பரிவாதினி கற்க**

என்று காணப்பெறுகிறது.

"குணசேனன் எனும் வல்லுநன் தன் அனுபவத்தால் ஆராய்ந்து முடிவுக்கு வந்த இசை இலக்கண முறையை, பாலை யாழிலிருந்து கிராமம் மாறி மத்தியக் கிராமமாக நிற்கும் விந்தையாகிய வித்யா பரிவாதினி முறையால் பண்ணீர்மையாகும் நிறங்களால் இராகங்களைத் தோற்றுவிக்கும் முறையினைக் கற்க" என்றும் அவரே பொருள் கொள்கிறார்.மகேந்திரவர்மனிடம் இருந்த நரம்பிசைக் கருவிக்கு 'பரிவாதினி' என்பது பெயராகக் கருதலாம். கல்வெட்டில் 'எட்டுக்கும் ஏழுக்கும் இவை உரிய' என்று வரும் வாசகம் சிந்தனைக்குரியது. இதில் ஏழு என்பது ஏழு நரம்புகளையுடைய யாழைக் குறிப்பதாகக் கருதலாம்.உத்தம சோழன் கல்வெட்டுகளில் தேவாரத் திருப்பதியம் கோவில்களில் இசைக்கப் பெற்று நிவந்தங்கள் அளிக்கப்பெற்றன. ஆதலின், முதல் இராசராசனுக்கு முன்பே

கோயில்களில் தேவாரம் இசைக்கும் பழக்கம் இருந்துள்ளது என்பதை அறியலாம்.

**முடிவுரை**

பல்லவர்கள் காலத்திலும் சோழர்க் காலத்திலும் நாடகம் வளர்ச்சிப் பெற்றமை பல்லவ மன்னனர்கள் இயற்றிய நாடக நூல்களும் தஞ்சை இராஜராஜசோழன் நாடகத்தை நடத்தியமையும் பார்க்கும் பொழுது நன்கு வளர்ச்சிப் பெற்றுள்ளது என்பது புலனாகிறது. கல்வெட்டுக் குறிப்புகள் நாடகங்களைப் பற்றி கூறினாலும் அவை எவ்வாறு நடிக்கப்பட்டன என்பதையும் அவை அழிந்த நிலைமைக்கான காரணத்தையும் அறிய முடியவில்லை. ஆனால் நாடகம் என்பது மனிதன் தோன்றிய போதே இயற்கையின் மூலமாகவும், அசைவியக்கங்கள் மூலமாகவும் தொடங்கிய போதே நாடகம் தோன்றிவிட்டது. கிரேக்க நாடகங்களின் தோற்றம் அவர்களின் மூட நம்பிக்கைகளின் தளமாக அமைந்த சடங்குகளினூடாகவே நிகழ்ந்ததுபோல தமிழ் நாடகங்கள் தோற்றம் போலச் செய்தல் தொடங்கி குகை ஓவியங்கள், பாறை ஓவியங்கள் இருந்து தொடங்கியது என்றே கூறலாம்.

**துணைநூற்பட்டியல்**


- கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக
- இல்லம், சென்னை, 2004.
- இராசமாணிக்கனார், மா., கல்வெட்டுக்களும் தமிழ்ச் சமூக வரலாறும், நியூ
- செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2008.
- வேங்கடேசன், ந., கல்வெட்டுகளும் சில வரலாறுகளும், திருக்குறள் பதிப்பகம்,
- சென்னை, 2009.
- கோவிந்தராசன், சி., கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி, மதுரை காமராசர்
- பல்கலைக்கழகம், மதுரை, 1987.
- புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுக்கள் தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி -
- 2,3,5
- Narayanan, V., “Vestiges of the drama in Early Tamil Literature” Torn, (Vol. X, P.IV,
- 1936).


.